<u>04.12.2023</u> <u>எம்.சி.ஓ.பி.28/2023</u> <u>பி.டபிள்யூ.1</u> <u>பெயர்.முருகேஸ்வரி</u>

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கபடுகிறார்.

**<u>எதிர் மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. எனக்கு ஒரு மகன் என்றால் சரிதான். எனது மகள் திருமணமாகி வெளியூரில் வசித்துவருகிறார் என்றால் சரிதான். எனது கணவர் மின்சார வாரியத்தில் வேலை செய்து தற்போது பணி நிறைவு பெற்றுவிட்டார் என்றால் சரிதான். எனது வீடு கீழவாணியங்குடி இந்திரா நகரில் உள்ளது என்றால் சரிதான்.

2. எனது வீடு சிவகங்கை–மானாமதுரை ரோட்டிற்கு கிழக்குபக்கம் உள்ளது என்றால் சரிதான். எனது மகன் அன்பழகன் பள்ளிக்கு சென்றதில்லை என்றால் சரிதான். எனது மகன் வாய் பேச இயலாத நடக்க சிரமப்பட்டு மன வளர்ச்சி குன்றி இருந்தார் என்றால் எனது மகன் சிவகங்கை முழுவதும் நடப்பான், வாய் பேசமுடியாது, மனவளர்ச்சி நன்றாக இருந்தது. எனது மகன் மனவளர்ச்சி குன்றி வாய் பேச இயலாத நடக்க சிரமப்பட்டு வந்தவர்தான் என்றாலும் வழக்கிற்காக நன்றாக இருந்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Location: Sivagangai
Date: 2023.12.04 18:33:04 +0530

3. எனது மகன் வேலைக்கு சென்றதில்லை என்றால் எனது மகன் வேலைக்கு சென்றார். என்ன வேலை செய்தார் என்றால் எலக்ரீசியன் வேலைக்கு யாரும் கூப்பிட்டார் செல்வார். எலக்ரீசியன் வேலைக்கு எனது மகன் சென்றார் என்று  வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

4. எனது மகன் பிறந்ததில் இருந்து மன வளர்ச்சி குன்றியதற்கும் வாய் பேச இயலாமல் இருந்ததற்கும் சிவகங்கை மற்றும் மதுரை மருத்துவமனையில் மருத்துவம் பார்த்தோம் என்றால் மருத்துவம் பார்த்தோம் அதன்பிறகு எனது மகன் நன்றாக இருந்தார். எனது மகன் இறக்கும்வரை மருத்துவம் செய்துவந்தோம் என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

5. எனது மகன் இறந்தது சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு சென்று யார் புகார் கொடுத்தது என்றால் எனது கணவர் புகார் கொடுத்தார். எனது மகனுக்கு 29.09.2015 அன்று விபத்து நடந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த அன்று புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது மகன் இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்புதான் புகார் கொடுத்தோம்.

6. விபத்து நடந்த அன்றே எனது கணவர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தார் என்றாலும் எனது மகன் மீது தவறு என்பதால்

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Location: Sivagangai
Date: 2023.12.04 18:33:25 +0530

அன்றைய தேதியிலேயே எனது மகனுக்கு மருத்து செலவிற்காக எனது கணவர் ரூ.20,000/-த்தை எதிர்மனுதாரர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு நடவடிக்கை வேண்டாம் என்று காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல பணம் எதுவும் கொடுக்கவில்லை.

7. விபத்து சிவகங்கை-மானாமதுரை ரோட்டின் கிழக்கு பக்கம் விபத்து நடந்தது என்றால் சரிதான் எனது மகன் மேற்கு பக்கம் வந்தார். ம.த.சா.ஆ.2 பிரேத பரிசோதனை அறிக்கையில் எனது மகன் இயற்கையான முறையில் இறந்ததாக சான்றளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8. எனது மகன் வேலை செய்ததை காட்டக்கூடிய ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகன் பிறந்தது முதல் இறக்கும் வரை என்னுடைய பராமரிப்பில்தான் வைத்து பாராமரித்து வந்தேன் என்று சொன்னாலும் எனது மகன் வேலைக்கு எதுவும் சென்றதில்லை என்று சொன்னால் சரியல்ல.

9. என்னுடைய கவனக்குறைவால்தான் விபத்து நடந்த அன்று எனது மகனை கவனிக்காமல் எனது மகன் ரோட்டிற்கு வந்து 1வது எதிர் மனுதாரர் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தில் விழுந்து விபத்திற்கு உட்பட்டார் என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர் மனுதாரர் முறைபடி

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Location: Sivagangai
Date: 2023.12.04 18:33:38 +0530

சிவகங்கை–மானாமதுரை ரோட்டின் இடது புறமாக சென்றுகொண்டிருந்தார் என்றாலும் வழக்கிற்காக எனது மகன் ரோட்டிற்கு மேற்குபுறமாக வந்துகொண்டிருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

10. நான் இந்த வழக்கில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. விபத்து எனது மகனால்தான் ஏற்பட்டது என்றாலும் எதிர் மனுதாரர்கள் எந்த வித இழப்பீடும் தர கடமைபட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Location: Sivagangai
Date: 2023.12.04 18:33:55 +0530

தலைமை குற்றவியல் நடுவர் (மு.கூ.பொ)
சிவகங்கை.